www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் இடைத்தேர்வு - 2024

வகுப்பு : 11
காலம் : 1.30 மணி

## பொதுத் தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 8×1=8

1. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
   (அ) அண்ணாமலையார் (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார் (ஈ) முருகன்
2. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   (அ) சு.வில்வரத்தினம் – ஆறாம் திணை
   (ஆ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதைமொழியும்
   (இ) பவணந்தி முனிவர் – நன்னூல்
   (ஈ) அ.முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்
   (அ) அ, ஈ (ஆ) ஆ, இ (இ) அ, ஆ (ஈ) இ, ஈ
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –.
   (அ) மண்புழு (ஆ) ஊடுபயிர் (இ) இயற்கை உரங்கள் (ஈ) இவை மூன்றும்
4. திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைத்தவர் ________
   (அ) ஆர்.பாலகிருஷ்ணன் (ஆ) இந்திரன்
   (இ) கமில் சுவலபில் (ஈ) அ.முத்துலிங்கம்
5. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   (அ) வானம் இடிந்தது (ஆ) மழை பெய்யவில்லை
   (இ) மின்னல் வெட்டியது (ஈ) வானம் என்பது பொய்யானது
6. நன்றுநன்று – இலக்கணக்குறிப்புத் தருக.
   (அ) அடுக்குத்தொடர் (ஆ) இரட்டைக்கிளவி
   (இ) பண்புத்தொகை (ஈ) வினைத்தொகை
7. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ________
   (அ) அ.முத்துலிங்கம் (ஆ) வ.ஐ.ச.ஜெயபாலன்
   (இ) தனிமகனார் (ஈ) ஜி.யு.போப்
8. மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   (அ) டமாரம், இங்ஙனம் (ஆ) ரூபாய், லட்சாதிபதி
   (இ) அன்னம், கிண்ணம் (ஈ) றெக்கை, அங்ஙனம்

### பகுதி – II – பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

9. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
10. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
11. குறுந்தொகை – நூற்குறிப்புத் தருக.

### பிரிவு –2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

12. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?
13. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
14. மதிப்புக்கூட்டுப் பொருள் என்றால் என்ன?

### பிரிவு –3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    (அ) கருவிழி (ஆ) திருப்புகழ்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

16. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) வைத்தார் (ஆ) அலர்ந்து
17. உயிரீறு, மெய்யீறு விளக்குக.
18. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
(அ) வாடகை (ஆ) சொந்தம்
19. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
குரை, குறை

## பகுதி – III – பிரிவு –1

ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக. 1×4=4

20. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
21. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

## பிரிவு –2

ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக. 1×4=4

22. தமிழ்நாட்டின் மாநில மரம் எது? அதன் பயன்களை குறிப்பிடுக.
23. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

## பிரிவு –3

ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக. 1×4=4

24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
(அ) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.
(ஆ) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.
25. தமிழாக்கம் தருக.
(அ) The pen is mightier than sword.
(ஆ) Work while you work and play while you play.
(இ) Simplicity is nature's first step, and the last of art.
(ஈ) Roads were made for journeys not destinations.

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**
'தா' என்ற வேர்ச் சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 2×6=12

26. (அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

27. (அ) 'சுற்றுச் சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

(ஆ) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

28. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 1×4=4
"ஏடு தொடக்கி ........" எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com